# கடல் நோக்கி நதிகள் பாயும்

கடல் நோக்கி நதிகள் பாயும்
ஒளி நோக்கி மலர்கள் சாயும்
அகிலமும் படைத்த என் தலைவா
என்னை நோக்கி வருவதேன் - 2

**1**
குருவிகள் பறந்திடும் உயரத்திலே
ஏணி தேவையில்லை - 2
நீரில் மீனினம் நீந்திடவே
படகு தேடிச் செல்வதில்லை - 2
ஞாலம் தாங்கும் எந்தன் இறைவா
என்னை நாடுவதேன் ஆ.. ...ஆ.. (2) (கடல்)

**2**
காத்திடும் இமைகள் அருகிருந்தும்
விழிகள் காண்பதில்லை - 2
நெஞ்சில் உன்னொளி நிறைந்திருந்தும்
உள்ளம் ஏனோ உணர்வதில்லை - 2
தவறிச் செல்லும் ஆடு நானே
என்னைத் தேடுவதேன் ஆ.. ...ஆ.. (2) (கடல்)